## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் – விடுதிகள் – 1212 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி/கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந 1) துறை**

**அரசாணை (நிலை) எண். 96** **நாள்: 29.10.2009**

**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். பி2/4723/2009, நாள். 12.8.2009.

-----------

**ஆணை** :

2009–2010–ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிக்கையில் 1206 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் மற்றும் 5 சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி இவ்வாண்டில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 2009–2010–ஆம் ஆண்டில் 1212 விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்க பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்த அறிவிப்பில் 1211 விடுதிகள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பினும் நடப்பாண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் புதிதாக ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி துவங்க ஆணையிடப்பட்டுள்ளதால், இவ்விடுதியினையும் சேர்த்து மொத்தம் 1212 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கலாம் எனவும், இதற்கான மொத்த செலவினம் வண்ணத் தொலைக்காட்சிப்

பெட்டி ஒன்றின் விலை ரூ.4145.68 என்ற விலையின் அடிப்படையில் ரூ.50,24,546/– செலவினம் ஏற்படும் எனவும் இதற்குரிய அரசாணையினை வழங்குமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து ஒரு 21" வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூ.4,000/–க்கு மிகாமல் 1212 பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/சிறுபான்மையினர் நல பள்ளி/கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு தலா ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கும் பொருட்டு எல்காட் நிறுவனம் மூலம் வாங்குவதற்கு தொடராச் செலவினமாக ரூ.48,48,000/– (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் (679 விடுதிகள் – ரூ.27,16,000/–)**

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –03– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி - பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் - JA –பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்.
(து.தொ.கு. 2225–03–277– JA – 2408)

**மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் (380 விடுதிகள் – ரூ.15,20,000/–)**

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –03– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – KA –மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்.
(து.தொ.கு. 2225–03–277– KA –2407)

**சீர்மரபினர் நலம் (148 விடுதிகள் – ரூ.5,92,000/–)**

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது –101 சீர்மரபினர் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத்

திட்டப் பணிகள் –II மாநில திட்டம் – JH – சீர்மரபினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்.
(து.தொ.கு. 2225–80 –101– JH – 2402)

<u>சிறுபான்மையினர் நலம் (5 விடுதிகள் – ரூ.20,000/–)</u>

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவர் இல்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்.
(து.தொ.கு. 2225–03–277– LA – 2406)

5. இச்செலவினம் ஒரு ''புதுப் பணி'' குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து, மேற்கொள்ள முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் அனுப்பி வைக்கும்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேற்காணும் செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2009–10–ல் சேர்ப்பதற்கான விளக்கக் குறிப்பினை நிதித்துறைக்கு உரிய நேரத்தில் தவறாது அனுப்பி வைக்கும்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையில் 1212 விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை வாங்கி வழங்குவதற்கு பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளை அனைத்து விடுதிகளுக்கும் வாங்கி வழங்க ஏதுவாக மாவட்ட வாரியாக விடுதிகளின் எண்ணிக்கை விவரங்களை எல்காட் நிறுவனத்திற்கு

வழங்கி எல்காட் நிறுவனம் மூலமாக சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் விநியோகிப்பதற்கு பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்து அரசுக்கு அறிக்கை அளிக்கும்படியும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு. எண்.62216/நிதி(பி.மி.பி.)/2009, நாள். 28.10.2009 மற்றும் கூடுதல் பேரேடு எண். 968–ல் (தொள்ளாயிரத்து அறுபத்து எட்டு) பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**து.நா.இராமநாதன்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
ஆணையர், சிறுபான்மையினர் நலம், சென்னை– 5.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை 1), சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை 2), சென்னை–18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை– 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**<u>நகல்:</u>**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9.
நிதித் (பி.மி.பி./வ.செ.(பொது I மற்றும் II)) துறை, சென்னை 9.
தகவல் தொழில்நுட்பத்துறை, சென்னை– 9.
மேலாண்மை இயக்குநர், எல்காட், சென்னை– 35.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந. 3/சிநஆபி) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உபரி படிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**